

எண் கணித பலன்கள்:

# எண்ணும், எழுத்தும்!

கே.சி.எஸ். ஐயர்

(02.07.2010 முதல் 08.07.2010 வரை)











**01, 10, 19, 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

தோல்விகளைக் கண்டு பயப்படாமல் வாழ்க்கையை யதார்த்தமாக எடுத்துக் கொள்ளும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ள உங்களின் தன்னம்பிக்கை பலப்படும். எதிர்பாராத புதிய இனங்களிலிருந்து வருமானம் வரும். அரசிடமிருந்து தேவையான சலுகைகள் கிடைக்கும். உங்களுக்கு எதிரான வழக்குகள் கட்டுக்குள் இருக்கும். உங்களின் நிர்வாகத் திறமை கூடும். அதேநேரம் சகோதர, சகோதரிகள் உங்களைப் பற்றி வீண் வதந்தியைப் பரப்புவார்கள். உற்றார், உறவினர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். சுப காரியங்களை நடத்த எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 3,4. **அதிர்ஷ்ட எண்கள் :** 2, 7.

**02, 11, 20, 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

வருமானம் குறைவாக வந்தாலும் மனதிற்குப் பிடித்த செயல்களில் உற்சாகத்துடன் ஈடுபடும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ளவர்களே! இவ்வாரம் நீங்கள் பொருளாதாரத்தில் சீரான நிலையைக் காண்பீர்கள். பழைய கடன்கள் வசூலாகும். தொழில் சூடு பிடிக்கும். புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் கணவன், மனைவியிடையே மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும். அலுவல் காரணமாக வெளியூர்களுக்குச் சென்று வருவீர்கள். அதேநேரம் எந்தவிஷயத்திலும் அவசரப்படுவதைத் தவிர்க்கவும்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 4, 7. **அதிர்ஷ்ட எண்கள் :** 3, 4.

**03, 12, 21, 30 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

தங்களின் முன்னேற்றத்திற்கு ஊறு விளைவிப்பவர்களையும் அரவணைத்துச் சென்று தம் கடமைகளை ஈடுபாட்டுடன் செய்யும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ள உங்களுக்கு இறையருள் கூடும். உங்கள் பலவீனம் வெளியில் தெரியாமல் புத்திசாலித்தனமாக காரிய மாற்றுவீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவீர்கள். குடும்பத்தினர் உங்களின் கரத்தை வலுப்படுத்துவார்கள். கூட்டுத் தொழில் செய்பவர்கள், நண்பர்களால் அனுகூலங்களைக் காண்பார்கள். தொலைதூரத்திலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். சிலருக்கு உயர் பட்டம், பதவிகள் கிடைக்கும் வாய்ப்புகள் ஏற்படும். வருமானம் நன்றாக இருந்தாலும் சில விரயங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. இல்லத்திற்கு விருந்தினர் வருகையும் இருக்கும்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 2, 6. **அதிர்ஷ்ட எண்கள் :** 1, 7.

**04, 13, 22, 31 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

கஷ்டகாலத்தில் அதிகமாக வருத்தப்படும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ளவர்களே! நீங்கள் கடின உழைப்பிற்கு நடுவே ஓய்வு நேரத்தை இன்பமாகக் கழிப்பீர்கள். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். பிரச்சினைகள் எவ்வளவு வந்தாலும் அவை இறுதியில் நன்மையில் முடிவடையும். உடல்நலம் சீராகும். குடும்பத்திலும் மருத்துவச் செலவுகள் குறையும். இல்லத்தில் சந்தோஷ நிகழ்ச்சிகள் நடக்கும். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சிறப்பாக இருக்கும். அதேநேரம் பண விஷயங்களில் ஏமாற்றங்கள் ஏற்படாது பார்த்துக் கொள்வீர்கள்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 2,5. **அதிர்ஷ்ட எண்கள் :** 1, 6.